நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

11 June 2016

2016

தரம் : மத்திய இடைநிலைப் பிரவு (ஆண்டு 7, 8)
Level : Mid Intermediate (Year 7 & 8)

வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 65 Minutes (Including 10 minutes of reading time)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

கீழ்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள 1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடை தருக.

பாரெல்லாந் தமிழொலிக்க வேண்டும் மற்றோர்
பற்றுடனே எம்மொழியைப் பயில வேண்டும்
ஊரூராய் மன்றங்கள் அமைத்தே எங்கள்
உயிரனைய மொழிவளரச் செய்தல் வேண்டும்
யாராலும் அழிக்க முடியாதவாறே
எம்மொழியை எம்மவர்கள் கற்றல் வேண்டும்
சீரானமனங் கொண்டு பற்றுங்கொண்டு
செந்தமிழை உலகாளச் செய்தல் வேண்டும்

1) தமிழ்மொழியை எவ்வாறு பயில வேண்டும்?
அ) எம்மவர்கள் ஆ) மற்றோர்
இ) பற்றுடனே ஈ) மன்றங்கள்

2) எவ்வாறு மொழியை வளர்த்தல் வேண்டும் என்று இந்தப் பாடல் சொல்கிறது?
அ) ஊரூராய் மன்றங்கள் அமைத்து ஆ) ஊரூராய் வீடுகள் அமைத்து
இ) ஊரூராய் ஆங்கிலம் பேசி ஈ) ஊரூராய் ஊர் அமைத்து

3) பயில வேண்டும் என்பது:
அ) பேச வேண்டும் ஆ) கற்க வேண்டும்
இ) பாட வேண்டும் ஈ) ஆட வேண்டும்

4) செந்தமிழை எவ்வாறு உலகாளச் செய்தல் வேண்டும்?
அ) சீரானமனங் கொண்டு ஆ) சீரானமணங் கொண்டு
இ) பணம் கொண்டு ஈ) சீரானமனங் கொண்டு பற்றுங் கொண்டு

5) இப்பாடலில் ஆசிரியரின் கருத்து அல்லாதது:
அ) செந்தமிழை உலகாளச் செய்தல் ஆ) செந்தமிழை வளரச் செய்தல்
இ) செந்தமிழை அழிக்கச் செய்தல் ஈ) செந்தமிழைப் பயிலுதல்

6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிக:

6) “மக்கள் என்மீது வைத்திருக்கும் அன்பையும் நம்பிக்கையையும் கண்டு உவகையடைகிறேன்” இங்கு “உவகை” என்பதன் ஒத்த கருத்துச் சொல்:
அ) கோபம் ஆ) கவலை இ) மகிழ்ச்சி ஈ) வியப்பு

7) கொடிய விலங்குகளுக்கு மக்கள் அஞ்சினர். இங்கு “அஞ்சினர்” என்பது:
அ) பயந்தனர் ஆ) பார்த்தனர் இ) ஓடினர் ஈ)ஆச்சரியப்பட்டனர்

8) “அறம் செய்ய விரும்பு”. இங்கு அறம் என்பது:
அ) சந்தேகம் ஆ) தருமம் இ) உணவு ஈ) உண்மை

9) மலைப் பிரதேசங்களிலே அழகு தவழும் நீர்வீழ்ச்சிகளைக் காணலாம். இங்கு “அழகு” என்பது:

அ) அகிலம் ஆ) வளர்ப்பு இ) வனப்பு ஈ) பூமி

10) ஆசிரியன் என்பதன் ஒத்த கருத்துச் சொல்:

அ) உழவன் ஆ) மாணவன் இ) ஆதவன் ஈ) ஆசான்

11 முதல் 15 வரை உள்ள பின்வரும் சொற் கூட்டங்களுள் வேறுபட்ட சொல்லைத் தெரிக:

11) அ) வைகறை ஆ) உதயம் இ) உடம்பு ஈ) விடியல்

12) அ) காடு ஆ) வனம் இ) கானகம் ஈ) வானம்

13) அ) ஆசிரியர் ஆ) முனிவர் இ) ஆசான் ஈ) குரு

14) அ) கவி ஆ) இசை இ) பாட்டு ஈ) பா

15) அ) புலவர் ஆ) பாவலர் இ) காவலர் ஈ) கவிஞர்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து கீழ்வரும் 16 முதல் 20 வரை உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிக:

ஒரு தந்தைக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுக்குள் அடிக்கடி சண்டை வரும். இதனால் தந்தைக்கு மனக் கவலை தாங்கமுடியவில்லை. எவ்வளவோ அறிவுரை கூறியும் அவர்கள் கேட்பதாக இல்லை. மறுபடியும் ஒருவருக்கொருவர் சண்டையிடத் தொடங்கினர்.

மனம் வெதும்பிய தந்தை ஒரு நாள், ஒரு ‘கரும்புக்கட்டு’ ஒன்றை வாங்கி வரச் செய்து, அவர்களை அழைத்து ‘இந்தக் கரும்புக் கட்டை அப்படியே உடையுங்கள்’ என்றார். அவர்கள் நால்வரும் எவ்வளவோ முயன்றும் கட்டோடு கரும்பை உடைக்க முடியவில்லை.

பின் தந்தையானவர் கட்டை அவிழ்த்து, கடைசி மகனை அழைத்து, அவற்றை உடைக்கச் சொன்னார். அவனும் வேகமாக ஒவ்வொரு கரும்பாய் எடுத்து, அத்தனையையும் அவன் ஒருவனாகவே ஒடித்துத் தீர்த்தான்.

தந்தை தம் மக்களைப் பார்த்துச் சொன்னார், ‘கரும்பு கட்டோடு இருக்கும் போது அதை ஒடிக்க முடியவில்லை. கட்டு அவிழ்ந்து தனித்தனியானதும் உங்களில் சின்ன பையன் கூட ஒடித்து விடுகிறான். அப்படியே, நம் குடும்பமும் ஒற்றுமையாக இருந்தால் நீங்கள் எதையும் இலகுவில் சாதிக்கலாம். நீங்கள் பிரிந்து நின்றால், சிதறிப்போன கரும்புக்கு ஏற்பட்ட கதிபோல விரைவில் அழிந்து போவீர்கள்.” என்றார்.

அன்றிலிருந்து அவர்கள் நால்வரும் நட்புடன் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழத் தொடங்கினர். குடும்பமே மகிழ்ச்சியில் இருந்தது. இதைப் பார்த்த தந்தையார் பூரித்துப் போனார்.

16) தந்தை ஏன் வருத்தம் அடைந்தார்?
அ) நான்கு பிள்ளைகள் இருந்ததால் ஆ) நீதி சொன்னதால்
இ) பிள்ளைகள் சண்டையிட்டதால் ஈ) பிள்ளைகள் சண்டையிடாததால்

17) கரும்புக்கட்டை முதலில் உடைக்க முயன்றவர்கள் யார்?
அ) இரண்டு பிள்ளைகள் ஆ) நான்கு பிள்ளைகள்
இ) மூவர் ஈ) ஒருவருமில்லை

18) கடைசி மகன் கரும்பை எதனால் உடைக்க முடிந்தது?
அ) கரும்புக் கட்டை அவிழ்க்காமல் ஆ) கரும்புக் கட்டை காலால் மிதித்து
இ) கரும்புக் கட்டை அவித்ததால் ஈ) தன் சகோதரர்களின் உதவியால்

19) பிள்ளைகள் ஏன் மனம் திருந்தினார்கள்?
அ) அப்பாவின் அறிவுரையால் ஆ) அப்பாவின் கட்டளையால்
இ) கரும்புக் கட்டினால் ஈ) ஊர் மக்களால்

20) தந்தையார் ஏன் பூரிப்படைந்தார்?
அ) தம் பிள்ளைகள் கரும்பை உடைத்ததால் ஆ) ஊர் மக்கள் ஏமாற்றியதால்
இ) தன் பிள்ளைகள் சண்டையிட்டதால் ஈ) தன் பிள்ளைகள் ஒற்றுமையாக இருந்ததால்

## 21 முதல் 25 வரையுள்ள பின்வரும் வினாக்களுக்கு, மிகவும் பொருத்தமான எதிர்க் கருத்தைத் தரும் சொல்லைத் தெரிக:

21) நாம் இயற்கை உணவுகளை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இயற்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்:
அ) வானம் ஆ) செயற்கை இ) இயல்பு ஈ) மழை

22) சகுனம் பார்த்துக் காரியம் செய்வது தமிழர் பண்பாடு. இங்கு சகுனம் என்பதன் எதிர்ச் சொல்:
அ) அசகுனம் ஆ) அல்சகுனம் இ) அபசகுனம் ஈ) அர்சகுனம்

23) செங்கோலாட்சி நடைபெறும் நாடா இது? இங்கு செங்கோலாட்சி என்பதன் எதிர்ச் சொல்:
அ) ஜனாதிபதியாட்சி ஆ) மன்னராட்சி இ) நெடுங்கோலாட்சி ஈ) காடுங்கோலாட்சி

24) மழை பெய்யுமுன் விண்ணிலே கார் மேகக் கூட்டங்களைக் காணலாம். இங்கு விண்ணிலே என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல்:
அ) வானத்திலே ஆ) மண்ணிலே இ) மழையிலே ஈ) மேகத்திலே

25) மன்னனின் புகழ் எங்கும் பரவியது. இங்கு புகழ் என்பதன் எதிர்ச் சொல்:
அ) இகழ் ஆ) கீர்த்தி இ) வியப்பு ஈ) சிறப்பு

26 முதல் 30 வரையுள்ள வினாக்களில் வரும் பழமொழிகளுக்குப், பொருத்தமான சொற்றொடரைத் தருக:

26) தன்வினை தன்னைச் சுடும்.
அ) சிறியதன் பெருமை
ஆ) நெருப்பு சுடும்
இ) வினை விதைத்தவன் வினை அறுப்பான்
ஈ) மனம் நோகுதல்

27) மதியாதார் முற்றம் மிதியாதே.
அ) மானம் பேண்
ஆ) அமைதியின் வெற்றி
இ) துணை போகுதல்
ஈ) சிறியதன் பெருமை

28) சிறு துளி பெரு வெள்ளம்.:
அ) முன்னேற்பாடு
ஆ) மனத்திருப்தி
இ) புத்தியே பலம்
ஈ) சிறியதன் பெருமை

29) மனமுண்டானால் இடமுண்டு.
அ) விருப்பமே வெற்றி
ஆ) மனம் மகிழ்தல்
இ) அழிவு அழிவைத் தேடும்
ஈ) வினை விடாது

30) விளையும் பயிரை முளையில் தெரியும்.
அ) உதவி செய்தல்
ஆ) ஆரம்பம் போல் முடிவு.
இ) அழிவு அழிவைத் தேடும்
ஈ) பாசாங்கு செய்தல்

31 முதல் 35 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான சொல்லைத் தருக :

31) வெத்திலை
அ) வெத்திஇலை
ஆ) வெற்றியிலை
இ) வெத்தலை
ஈ) வெற்றிலை

32) கருவேப்பிலை
அ) கருவேம்பிலை
ஆ) கரிவேப்பிலை
இ) கறிவேப்பிலை
ஈ) கருவெப்பம் இலை

33) சிலவு
அ) சிளவு
ஆ) சிழவு
இ) செளவு
ஈ) செலவு

34) நாத்தம்
அ) நாத்றம்
ஆ) நாற்றம்
இ) நத்தம்
ஈ) நற்றம்

35) குடுத்தான்
அ) கொடுத்தான்
ஆ) கெடுத்தான்
இ) கோடுத்தான்
ஈ) கொடு

36 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிக:

36) இல்லை என்னாது வாரி வழங்குபவன்:
அ) வல்லல் ஆ) வள்ளல் இ) உலோபி ஈ)பணக்காரன்

37) நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் ஆட்சி:
அ) கொடுங்கோல் ஆ) செங்கோல் இ) ஆட்சி ஈ)கட்சி

38) கடிதம் மூலம் அறிமுகமான நண்பர்:
அ) கடித நண்பர் ஆ) காகித நண்பர் இ) பேனாவின் நண்பர் ஈ)பேனா நண்பர்

39) கலைஞர் என்பவர்:
அ) கலைகளில் வல்லுநர் ஆ) கலை இ) கலைகள் ஈ)ஒருவரின் பெயர்

40) மனச்சுமை என்பது:
அ) சுமை ஆ) மனப்பாரம் இ) மனநிறைவு ஈ) மனமகிழ்ச்சி

41 முதல் 45 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட பகுதியில் கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிக:

உணவுக்காக மிருகங்களை வேட்டையாடி நாடோடியாக வாழ்ந்த மனிதன், காலப்போக்கில் விவசாயம் செய்யத் 41) ........................ . விலங்குகளை வளர்க்கத் தொடங்கினான். தனக்கும் தனது விவசாய முயற்சிக்கும் விலங்குகளுக்கும் தேவையான நீரைப் பெற ஆற்றங்கரையோரங்களில் குடியேறி நிரந்தரமான வாழிடத்தை 42) ........................ . இதன் விளைவாக நதிக்கரை நாகரிகங்கள் 43) ........................ . நிரந்தரமாக ஓரிடத்தில் வாழத் தொடங்கிய மனிதனுக்கு ஓய்வு நேரம் கிட்டியது. பொழுது போக்குவதற்காக ஆடல் பாடல்களில் 44) ........................ . தான் வாழ்ந்த குகைகளில் சித்திரங்களை வரையத் தொடங்கினான். இதனால் கலைகள் 45) ........................ . அன்று தொட்டு மனிதன் தனது வாழ்வை மேம்படுத்தும் முயற்சிகளில் இடைவிடாது ஈடுபட்டான் வெற்றியும் கண்டான்.

41) அ) தொடங்கினான் ஆ) தொடங்கினார்கள்
இ) தொடங்குவான் ஈ) தொடங்குகிறான்

42) அ) அமைப்பான் ஆ) அமைத்துக் கொள்ளவில்லை
இ) அமைக்கிறான் ஈ) அமைத்துக் கொண்டான்

43) அ) உருவாகவில்லை ஆ) உருவாகும்
இ) உருவாகின ஈ) உருவாகிக்கொண்டிருக்கின்றன

44) அ) ஈடுபட்டான் ஆ) ஈடுபடுவான்
இ) ஈடுபடவில்லை ஈ) ஈடுபட்டிருந்தால்

45) அ) அழியத் தொடங்கின ஆ) வளரத் தொடங்கின
இ) வளரத் தொடங்கவில்லை ஈ) வளரத் தொடங்கலாம்

45 முதல் 50 வரையுள்ள வினாக்களில் வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான பயனிலையைத் தெரிக:

46) ஒழுக்கமுள்ளவனாய் வாழ்ந்து வாழ்க்கையில் ..............................

அ) தாழ்வடைவேன் ஆ) உயர்வடைவாய்
இ) உயர்வு வாழ்வாய் ஈ) வாழ்வாய்

47) நூல்களை வாசிப்பதனால் அறிவு ..............................

அ) பெருகும் ஆ) பெருகாது
இ) படிப்போம் ஈ) வாசிப்போம்

48) அவன் வேலைகளை ஒழுங்காகச் ..............................

அ) செய்வார்கள் ஆ) செய்வான்
இ) செய்யும் ஈ) செய்யுங்கள்

49) பண்டைய மன்னர்கள் புலவர்களை ..............................

அ) ஆதரித்தனர் ஆ) ஆதரித்தாள்
இ) ஆதரிக்கவில்லை ஈ) ஆதரித்தான்

50) நாம் கிராமத்தில் இயற்கைக் காட்சிகளைக் ..............................

அ) கண்டான் ஆ) காண்க
இ) கண்டார்கள் ஈ) காணலாம்

50 முதல் 55 வரையுள்ள வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிக:

51) ஒரு தொழிலை மன விருப்பின்றிக் கடமைக்காகச் செய்தல் என்பதைக் குறிக்கும் மரபுத் தொடர்:
அ) தட்டிக்கழித்தல் இ) கடன்வாங்குதல்
இ) கடன்கழித்தல் ஈ) கடமைசெய்தல்

52) 'உப்பில்லாப் பேச்சு' என்பதன் பொருள்:
அ) குழப்பமானபேச்சு ஆ) சுவையுள்ளபேச்சு
இ) பயனுள்ளபேச்சு ஈ) பயனற்ற பேச்சு

53) திருடன் எக்குத்தப்பாக மாட்டிக்கொண்டான். இங்கு எக்குத்தப்பாக என்று குறிப்பிடப்படுவது

அ) ஏறமுடியாமல் ஆ) எதிர்பாராத வகையில்
ஆ) இறங்க முடியாமல் ஈ) வழக்கம் போல

54) பிறர் மனதை புண்படுத்தக் கூடாது. இங்கு புண்படுத்தல் என்பதைக் குறிப்பது:

அ) மனம் நோகப் பேசுதல் ஆ) காயப்படுத்துதல்
இ) மனதில் நிற்றல் ஈ) புண்ணாக்குதல்

55) முதலைக்கண்ணீர் விடல் என்பதன் பொருள்:

அ) முதலையைப் போல் கண்ணீர் விடல் ஆ) அதிக நேரம் கண்ணீர் விடல்
இ) அறியாமல் கண்ணீர் விடல் ஈ) பாசாங்கு செய்தல்

வினா 56 :

"செல்பேசியின் (கையடக்கத் தொலைபேசியின்) பாதிப்புகள்" என்ற தலைப்பில் 50 சொற்களுக்குக் குறையாமல் ஒரு சிறு கட்டுரை எழுதுக:

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2016